**கவனிக்க.-** *2007.11.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1525 - 2007 නොවැම්බර් 23 වැනි සිකුරාදා - 2007.11.23**

*1525 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக்கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1106 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1106 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க.-** (i) அப்பி வெனுவென் அப்பி சட்டமூலம் 2007, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தம்) சட்டமூலம் 2007, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் சட்டமூலம் 2007, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, நவெம்பர் 30 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, நவெம்பர் 16 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 468

### தேசிய மாணவ வீரர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல்

2005, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்னல் ஆக :

- உ/3052 மேஜர் (தற்காலிக லெப்டினன்ட் கர்னல்) எஸ்கேபீ வீரகோன்
- உ/3053 மேஜர் (தற்காலிக லெப்டினன்ட் கர்னல்) எச்எம்எஸ்பீ ஹேரத்
- உ/3055 மேஜர் (தற்காலிக லெப்டினன்ட் கர்னல்) எச்பீபீஏ அல்விஸ்
- உ/3119 மேஜர் (தற்காலிக லெப்டினன்ட் கர்னல்) ஆர்எம் பிரேமதாச

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, .................

11-796

---

2007 இன் இல. 469

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/264ஏவை.

### இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை

மரணத்தின் பின்னர் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவிக்கு மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் தொன் சஞ்ஜய குமார வெலிகல இபீப (உ/5049)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, சனவரி 09.

11-801

---

2007 இன் இல. 470

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/269/ஏவை.

### இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் பிரேம ஜயந்த உதலாகம இசைப (உ/5407)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒற்றோபர் 18.

11-802

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### இ. அ. நி. கூ. வர்தன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"ருவன்வல்லையைச் சேர்ந்த டிக்கிரிதந்திரி மஹாசமிலாகே பந்துல குணசேக்கர என்பவர், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட் சார்பில் குருநாகலைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஐ. எம். என். கே. இலங்கன்திலக்க என்பவரினால்

அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, யூலை 27 ஆந் திகதிய 462 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீது குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எப். ஜே. சீ. டபிள்யு. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.08.16 ஆந் திகதிய 807 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராத லாலும் 2007, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக சொல்லப்பட்ட முறிகளின்மீது இருபத்தாறு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நாற்பத்தாறு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 26,79,046.38) கொண்ட தொகையும், 2007, யூன் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை இருபத்திநான்கு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து முந்நூற்றிமுப்பத்தாறு ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூ. 24,79,336.91) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தேழு சதவீத (27%) வட்டியுடனும் அல்லது 2007, யூன் 27 ஆந் திகதியிலிருந்து முப்பத்திரண்டு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூற்றிதொண்ணூற்றைந்து ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 32,78,795.25) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) அல்லது வசதிக்கு ஏற்புடையற்பாலதான வேறேதேனும் வீத வட்டியும் சொல்லப்பட்ட டிக்கிதந்திரி மஹாசமிலாகே பந்துல குணசேக்கர என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும் இ. அ. நி. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் இலக்க பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப் படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்தாறு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நாற்பத்தாறு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 26,79,046.38) கொண்ட தொகையும், 2007, யூன் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை இருபத்திநான்கு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து முந்நூற்றிமுப்பத்தாறு ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூ. 24,79,336.91) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தேழு சதவீத (27%) வட்டியுடனும் அல்லது 2007, யூன் 27 ஆந் திகதியிலிருந்து முப்பத்திரண்டு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூற்றிதொண்ணூற்றைந்து ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 32,78,795.25) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) அல்லது வசதிக்கு ஏற்புடையற்பாலதான வேறேதேனும் வீத வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 462 ஆம், 807 ஆம் இலக்கங்களைக் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 462 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள அத்துலுகம் கோறளையில் அத்துலுகம கிராமத்தில் அமைந்துள்ளதும், "கட்டுகஹாஒவிட்ட" எனவழைக்கப்படும் காணியினதாய் காணித்துண்டம் 01 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டுள்ள சொல்லப்பட்ட காணித்துண்டு, உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. ரூபசிறி ஆனந்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993.03.06 ஆந் திகதிய 993/6 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளதுடன், சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையும் கொண்டுள்ளது- : வடக்கில் : இன் எல ; கிழக்கில் : அவிசாவலை-கேகாலை பிரதான வீதி ; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 02 ; மேற்கில் : அத்துலுகம் ஓய. பரப்பளவில் இது, அதன் மீதுள்ள மரங்களுடனும் பயிர்களுடனும் கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் இரண்டு றூட் பதின்மூன்று சதம் எட்டு சைபர் ஆறு பேர்ச்சுக்களை (0ஏ. 2றூ. 13.806பே.) கொண்டுள்ளது.

### 807 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கந்துபலாத்தபத்துவவின் யட்டிநுவர கோறளையில் கண்டி காணிப்பதிவகத்தைச் சேர்ந்த மமுதாவெல கிராமத்தில் அமைந்துள்ளதும், "கிரிமள்ள கஹாமுலஹேன" எனவழைக்கப்படுவதுமான காணியின் பிரிக்கப்பட்ட அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு- வடக்கில் : பொட்டபிட்டியவிலிருந்து கந்துகன்னாவ வரையிலான பிரதான வீதி ; கிழக்கில் : 3655 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் இல. 5பீ ; தெற்கில் : காணித்துண்டம் இல. 5டீ ; மேற்கில் : காணித்துண்டம் இல. 1 உம் நட்டரம்பொத்தே ஹேன மறுபெயர் அதாரபில்லே ஹேனே வத்தவும் ; பரப்பளவில் இது, உரிமம்பெற்ற நில அளவையாளர் ஆர். சீ. ஓ. டி லா-மொட் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1968.10.06 ஆந் திகதிய 3655 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 5ஏ எனக் குறித்துக்காட்டப்பட்டதாய் அதன் மீதுள்ள மரங்களுடனும் பயிர்களுடனும் கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் இரண்டு றூட் பன்னிரண்டு பேர்ச்சுக்களை (0ஏ. 2றூ. 12பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான
நிறைவேற்றுலுவலர்.

இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யு. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு - 02.

11-749/3

---

### இ. அ. நி. கூ. வங்கி

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி,பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"குருநாகலில் 'கருணாநாயக்க ட்ரேடர்ஸ்' என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின்கீழும் பங்காண்மையில் தொழில் கொண்டுநடாத்துகின்ற இருவரும் குருநாகல்லைச் சேர்ந்த கருணாநாயக்க முதியான்சலாகே ஷாந்த குமார கருணாநாயக்க மற்றும் ஹேரத் முதியான்சலாகே அனுலாவதி என்போர்,

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் குருநாகலைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. வந்துராகல என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, நவெம்பர் 01 ஆந் திகதிய 13687 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும் 2007, யூலை 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக பத்து இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முந்நூற்றுமுப்பத்தைந்து ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 10,28,335.86) கொண்ட தொகையும் 2007, ஓகத்து 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒன்பது இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐநூற்றிப்பத்தொன்பது ரூபா அறுபத்திநான்கு சதம் (ரூ. 9,68,519.64) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வொராண்டும் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீதம் (7.5%) வட்டியும் சொல்லப்பட்ட கருணாநாயக்க முதியான்சலாகே ஷாந்த குமார கருணாநாயக்க மற்றும் ஹேரத் முதியன்சலாகே அனுலாவதி என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்தவங்களின்கீழ், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 13687 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் கொண்ட காணித்துண்டை விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பத்து இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முந்நூற்றிமுப்பத்தைந்து ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 10,28,335.86) கொண்ட தொகையை, 2007, ஓகத்து 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒன்பது இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐநூற்றுப்பத்தொன்பது ரூபா அறுபத்திநான்கு சதம் (ரூ. 9,68,519.64) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வொராண்டும் மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 13687 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ.நி.கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் கொண்ட காணித்துண்டம் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதார் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**13687 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் தேவமெதி ஹத்பத்துவின் தேவமெதி உடுக்கஹா கோறளையில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். வெலகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.09.10 ஆந் திகதிய 3990 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 03 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், திம்பிரிகஹாமுல்ல பிட்டியேவத்த மறுபெயர் திம்பிரிகஹா பிட்டியேவத்த துண்டம் ஈ எனவழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித் துண்டம் சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது. வடகிழக்கில் : வாரியப்பொலவிலிருந்து களுகமுவ வரையிலான பிரதான வீதியும், பொதுக்கிணறும் வசுவண்டி தரிப்பிடமும் ; தென்கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 5 ; தென்மேற்கில் : எச். எம். பிரேமாவதியினால் உரிமைகோரப்பட்ட காணி ; வடமேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ளவையும் அதனோடு இணைந்துள்ளவையுமான கட்டிடங்களும் பயிர்களுடனும் மற்றெல்லாவற்றுடனும் பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 19.5பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி. கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு - 03.

11-749/1

---

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0500-638114-001 (பழைய சோனகர் தெருக் கிளை)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2004.09.17 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொழும்பு 12 ஐச் சேர்ந்த ராஜசிங்கம் இன்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிட்டெட் கடனெடுத்தவர் என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு சீ. சச்சிதானந்தன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999.11.30 ஆந் திகதிய 47 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது. ஆதலால் இப்பொழுது 2004,சனவரி 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட

முறிகளின்மீது பதினான்கு இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து நாநூறு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 14,43,400.13) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 14,43,400.13 பணத்தொகையையும் 2004, சனவரி 31 ஆந் தேதியயிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சதவீதப்படி (26%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 47 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. டன்ஸ்ரன் கெலார்ட் என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது ".

### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியனே கோறளேயின் மெத பத்துவில் இஹலயகொட கிராமத்தில் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1986.11.04 ஆந் தேதிய 544/1986 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் காட்டப்பட்ட "யாகொட எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணியின் துண்டு "ஓ" எனக் குறிக்கப்பட்டதுமான, பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட காணிப்பங்கிடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட துண்டு பி இன் எல்லைகள் : வடக்கு : துண்டு "பி" ; கிழக்கு ; துண்டு கே (ஒரு வீதிக்கான ஒதுக்கல்) ; தெற்கு : துண்டு என் ; மேற்கு : அதேகாணியின் துண்டு பீ . பதினொன்று தசம் ஒன்பது மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 11.93பே.) விஸதீரணமுள்ள இது கம்பஹா மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஈ 438/42 ஆம் உரித்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியனே கோறளேயின் மெத பத்துவில் இஹலயகொட கிராமத்தில் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1986.11.04 ஆந் தேதிய 544/1986 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் காட்டப்பட்ட "யாகொட எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணியின் துண்டு "பி" எனக் குறிக்கப்பட்டது மான, பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட காணிப்பங்கிடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட துண்டு பி இன் எல்லைகள் : வடக்கு : பெரு வீதி ; கிழக்கு ; துண்டு கே (ஒரு வீதிக்கான ஒதுக்கல்) ; தெற்கு : துண்டு "ஓ" ; மேற்கு : அதே காணியின் துண்டு பீ. பதினெட்டுத் தசம் ஐந்து ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18.56பே.) விஸ்தீரணமுள்ள இது கம்பஹா மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஈ 297/156 ஆம் உரித்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட காணியின் அண்மையில் ஒருங்கிணைக் கப்பட்டு மீள அளவை செய்யப்பட்டு உத்தரவுபெற் நில அளவையாளர் ஏ. ஏ. பி. ஏ. ரஞ்சித் என்பவரால் இரண்டும் தயாரிக்கப் பட்டதான 1999.06.02 ஆந் தேதிய 242 மற்றும் 241 ஆம் இலக்க வரைபடங்களில் காட்டப்பட்டும் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள் ளன :-

1. மேல் மாகாணம், கமப்ஹா மாவட்டத்தில் சியனே கோறளேயின் மெதசிய பத்துவில் கம்பஹா பிரதேச சபை எல்லைகளினுள் இஹலய கொட கிராமத்தில் அமைந்துள்ள "ஜாகொட எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணியயிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1986.11.04 ஆந் தேதிய 544/1986 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட "துண்டு பி" இன் பகுதியினதும் "துண்டு ஓ" இனதும் ஒருங்கிணைக்கப்பட்டதும் (மீள் அளவீடாயுள்ள) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. பி. ஏ. ரஞ்சித் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999.06.02 ஆந் தேதிய 242 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு ஓ இன் எல்லைகள் : வடக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. பி. ஏ. ரஞ்சித்தால தயாரிகப்பட்ட 1999.06.02 ஆந் தேதிய 241 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு பி$^1$ ; கிழக்கு ; வீதி ; தெற்கு : ஜே. ஏ. சிரியா லதா காந்தியின் காணி ; மேற்கு: ராஜசிங்கம் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டன் வளவு. இது பதிநான்கு தசம் ஐந்து மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14.53பே.) விஸ்தீரணமுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியனே கோறளேயின் மெத பத்துவில் கம்பஹா பிரதேச சபை எல்லைகளினுள் இஹலய கொட கிராமத்தில் அமைந்துள்ள "ஜாகொட எஸ்டேட்" என்றழைக்கப் படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1986.11.04 ஆந் தேதிய 544/1986 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு பி இன் பகுதியின் மீள் அளவீடாயுள்ள) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. பி. ஏ. ரஞ்சித் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999.06.02 ஆந் தேதிய 241 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு பி எனக் குறிக்கப்பட்டதுமான காணிப் பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு பி இன் எல்லைகள் : வடக்கு : பிரதேச சபை வீதி ; கிழக்கு ; வீதி ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. பி. ஏ. ரஞ்சித் தயாரித்த 1999.06.02 ஆந் தேதிய 242 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு ஓ 1 ; மேற்கு : ராஜசிங்கம் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டடின் வளவு. இது பதினாறு தசம் எட்டுப் பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16.80 பே.) விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

11-720

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

(பண்டாரவளை கிளை)-கணக்கு இல. : 0460-074227070-101

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால்

2004.09.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"பண்டாரவளையைச் சேர்ந்த குருப்பு முதியன்சலாகே விஜேகோன் பண்டார என்பவர் கடனெடுத்தவர் என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு சுஹைராஃ பாலிக் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2001, ஒகத்து 7 ஆந் திகதிய 35 ஆம் இலக்க மற்றும் 2002, ஏப்பிறல் 9 ஆந் தேதிய 99 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது 2004, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பது சதம் (ரூ. 1,35,239.80) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 1,35,239.80 பணத்தொகையையும் 2004, மே 01ஆந் தேதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சதவீதப்படி (26%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 35 மற்றும் 99ஆம் இலக்க முறிகளால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

### அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலகப் பிரிவில், கும்பல்வல கோறளேயில் இடமேகம கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ற்றெடெடன் எஸ்டேட் என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சமரசேகரவால் தயாரிக்கப்பட்ட 1986.11.18 ஆந் தேதிய 1030 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 14 எனக் காட்டப்பட்டதுமான காணிப் பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. இதன் எல்லைகள்- வடக்கு : துண்டு 13 மற்றும் வீதி ; கிழக்கு : வனத்துக்காக வைத்திருக்கப்படும் ஒதுக்கல் ; தெற்கு : துண்டு 15 ; மேற்கு : துண்டு 13 மற்றும் வீதி. ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தொன்பது பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 39பே.) விஸ்தீரணமுள்ள இது 2001.07.26 ஆந் தேதிய 6141 ஆம் இலக்க வரைபடத்தின் மூலம் மீள அளவிடப்பட்டு சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்- வடக்கு : 1986.11.18 ஆந் தேதிய வரைபடம் இல. 1030 இல் துண்டு இல. 13 ; கிழக்கு ; வனத்துக்காக வைத்திருக்கப்படும் ஒதுக்கல் ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1030 இல் துண்டு 15 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1030 இல் துண்டு 13. சொல்லப்பட்ட 6141 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தொன்பது பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 39பே.) விஸ்தீரணமுள்ள இது பதுளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஜே. 129/156 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

11-721/1

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(மாவனெல்ல கிளை)-கணக்கு இல. : 0480 - 06508430-001

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2007 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"மாவனெல்லையைச் சேர்ந்த ராஜக்ஷ முதலிகே பிரியந்த குமார முதலிகே என்பவர் கடனெடுத்தவர் என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. ஜீ. ஐ. கம்லத் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2001, நவெம்பர் 16 ஆந் திகதிய 547, 548 ஆம் இலக்க மற்றும் 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிய 570, 571 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது 2006, ஒகத்து 23 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது பன்னிரண்டு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற் றொன்பது ரூபா முபபத்தெட்டுச் சதம் (ரூ.12,67,399.38) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 12,67,399.38 பணத்தொகையையும் 2006, ஒகத்து 24 ஆந் தேதிதொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்திமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 547, 548, 570 மற்றும் 571 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்பட்டதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது ".

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் கல்பொட கோறளையின் மடபத்துவில் மாவனெல்லையில் அமைந்துள்ள மட்டேகொட வத்த அசதும கணத்தி என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டபிள்யு. நந்தசேனவால் தயாரிக்கப்பட்ட 2000.05.02 ஆந் தேதிய 2050/A இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள்- வடமேற்கு : மட்டேகொடவத்த ; கிழக்கு : எல மற்றும் பிரதேச சபை வீதி ; தெற்கு மற்றும் தென் மேற்கு : மட்டேகொடவத்த மற்றும் மட்டேகொடவத்த அஸவட்டு கணத்தி என்றழைக்கப்படும் காணி பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ 10பே.) விஸதீரணமுள்ளது. இது கேகாலை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் C706/75 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

11-721/2

---

**மக்கள் வங்கி-சிலாபம் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2007.07.27 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மாறவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவினி ஏ. எஸ். தஸநாயக்கா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.07.02 ஆந் தேதியும் 736 ஆம் இலக்க, அடைவுச்சீட்டின் பிரகாரம் கொடுப்பனவு, காதர் முஹியத்தீன் முஹம்மது சரிபு என்றழைக்கப்படுபவர் கடப்பாடுடையவராகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், அவ்வடைவின் கீழ் எட்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து அறுபத்தேழு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 8,42,067.49) மக்கள் வங்கிக்கு அறவிடப்பட வேண்டியுள்ளதால், மேலும் எட்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து அறுபத்தேழு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 8,42,067.49) 2006.08.19 ஆந் தேதி முதல் வ ருடத்துக்கு பதினெட்டு தசம் ஐந்து சதவீதம் (18.5%) ஏலவிற்பனைத் தினம் வரை மேலும் வட்டியுடன், சக தொடர்புடைய மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) சரத்தின்படி அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணம் உட்பட, ஏதாவது கட்டணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட எட்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து அறுபத்தேழு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 8,42,067.49) மீட்டெடுப்பதற்காக நீர்கொழும்பு பிரசித்த ஏலவிற்பனையாளர் திரு. டப். பீ. ஸீ. பெரேரா என்பவரால் 736 ஆம் இலக்க அடைவுச்சீட்டின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனங்களைப் பொது ஏலத்தில் விற்கப்படவேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் பிரகாரம் வழங்கியுள்ள அதிகாரத்திற்கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் விவரணம்**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் காணிப் பதிவு பிரிவுக்குட்பட்ட, முன்தளம் பிரிவில், ஆனவிழுந்தான் பத்துவில், தாரகுடிவில்லு எனும் கிராமத்தில் அமைந்துள்ள தாரகுடிவில்லு யாய எனப் பெயரிடப்பட்டுள்ள காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் திரு. வொட்ஷன் பெரேராவினால் 1990 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 1019 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 25ஏ ஆம் இலக்கத் தொகுதிக்கு எல்லைகள் - வடக்கில் : கிராம சபைப் பாதை ; கிழக்கில் : 25 பி இலக்கத் தொகுதி ; தெற்கில் : 53 ஆம் இலக்கத் தொகுதி ; மேற்கில் : 26 ஆம் இலக்கத் தொகுதி ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு ஏக்கர், பூச்சியம் றூட், இருபத்தி மூன்று பர்ச்சஸ் (1ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அத்துடன் மண்ணோடு சேர்த்து அக்காணியில் இருக்கும் மரமட்டைகள், பழங்கள், கட்டிடங்கள், ஆகிய அனைத்தும் அடங்கும். இக்காணி சிலாபம் காணிப்பதிவுக் காரியாலயத்தில் R 54/41 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது".

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

பிரதேச முகாமையாளர்,
சிலாபம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 79, மாறவில பாதை,
நாத்தாண்டிய.

11-740

---

**மக்கள் வங்கி-கொக்கல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் 2006.10.20 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"தீகொட கமகே சுதத் பிரேமசந்திர மக்கள் வங்கியின் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சோமபால ஹொரதுகொட கமகே அத்தாட்சிப்படுத்திய 2004.10.28 ஆந் திகதிகொண்ட 611 ஆம் இலக்க, ஈட்டு முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது மேற்படி ஈட்டுமுறியின்மீது நாலு இலட்சத்து முப்பத்தையாயிரம்

ரூபா (ரூ. 4,35,000) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் மேற்படி நாலு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா (ரூ. 4,35,000), நாலு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா (ரூ. 4,35,000) 2005.01.27 ஆந் தேதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 18.25 சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் என்னும் பிரிவின்கீழ் அறவிடற்பாலதான பணங்களையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 611 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பற்று, மலல்கொட பிட்டியவில் அமைந்துள்ளதும் வெவவத்த அல்லது மாரகஹாகொறட்டுவ என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் அஜித் ரஞ்சன் வீரசூரிய தயாரித்த 1994, ஒகத்து 15, 1994.10.04, 1994.10.21, 1994.12.22 ஆந் திகதிகள் கொண்ட 380ஏ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. துண்டு 5 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : இதே காணியின் துண்டு 7 ; கிழக்கில் : இதே காணியின் துண்டு 4 ; தெற்கில் : கஜுகஹாகொறட்டுவ ; மேற்கில் : இதே காணியின் துண்டு 6 என்பன அமைந்துள்ளன. மேற்படி 380ஏ ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட், பதினைந்து தசம் நாலு இரண்டு பர்ச்சஸ் (0ஏ. 1றூ. 15.42பே.) இது காலி மாவட்டக் காணிப்பதிவகத்தில் டீ 878/131 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 22, டிக்சன் கீழ் வீதி,
காலி.

11-741

---

## மக்கள் வங்கி-காலி கோட்டை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் 2007.08.23 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

லொக்கு சாட்டு ஹேவா உபாலி சுனில் சுரேந்திரசிங்க மக்கள் வங்கியின் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு மஹா கமகே சூலாங்கனி அரோஷினி அத்தாட்சிப்படுத்திய 2006.04.10 ஆந் திகதிகொண்ட 1110 ஆம் 1111 ஆம் இலக்க, ஈட்டு முறிகள், 2007.01.31 ஆந் திகதிகொண்ட 1759 ஆம் இலக்க ஈட்டுமுறி, காலியைச் சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய அஜந்தா கபுகமகே அத்தாட்சிப்படுத்திய 2006.12.22 ஆந் திகதிகொண்ட 1152 ஆம் இலக்க ஈட்டுமுறி என்பனமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது மேற்படி ஈட்டுமுறிகளின்மீது மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா ஆறு சதமும் (ரூ. 3,40,000.06), ஆறு இலடசம் ரூபாவும் (ரூ. 6,00,000), ஐந்து இலட்சம் ரூபாவும் (ரூபா 5,00,000), மூன்று இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தேழு ரூபா எழுபத்தெட்டு சதமும் (ரூபா 3,83,857.78) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் மேற்படி மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா ஆறு சதமும் (ரூ. 3,40,000.06), ஆறு இலட்சம் ரூபாவும் (ரூ. 6,00,000), ஐந்து இலட்சம் ரூபாவும் (ரூபா 5,00,000), மூன்று இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தேழு ரூபா எழுபத்தெட்டு சதத்தையும் (ரூபா 3,83,857.78) மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா ஆறு சததத்தின்மீது (ரூ. 3,40,000.06) 2007.01.13 முதல் ஆண்டொன்றுக்கு 20.5 சதவீதப்படியும் ஆறு இலட்சம் ரூபா மீது (ரூபா 6,00,000) 2007.05.01 ஆந் திகதி முதல் ஆண்டொன்றுக்கு 21.5 சதவீதப்படியும் ஐந்து இலட்சம் ரூபா மீது (ரூபா 5,00,000) 08.01.2007 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 22 சதவீதப்படியும் மூன்று இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தேழு ரூபா எழுபத்தெட்டு சதத்தின் (ரூபா 3,83,857.78) 2007.05.01 முதல் ஆண்டொன்றுக்கு 34 சத வீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் என்னும் பிரிவின்கீழ் அறவிடற்பாலதான பணங்களையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 1110 ஆம், 1111 ஆம், 1759 ஆம், 1152 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பி. ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், காலியின் நான்கு கிறவட்ஸ்கக்கும் காலி மாநகர சபை எல்லைகளுக்குமுட்பட்ட காலு பியத்தயில் அமைந்துள்ளதும் மஹாவத்தயின் ஏழில் ஒரு பகுதி என அழைக்கப்படுவதுமான காணியின் துண்டு ஏ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு ஏ என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : கச்சு வத்த வீதி மற்றும் தலுவத்த அல்லது லமாஹேவகேவத்த ; கிழக்கில் : தலுவத்த அல்லது லமாஹேவகேவத்த ; தெற்கில் : இதே காணியின் துண்டு 3 என்பதன் எஞ்சிய பகுதி ; மேற்கில் : கச்சு வத்த வீதி என்பன அமைந்துள்ளன.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிசிர அமேந்திர தயாரித்த 2000.02.21 ஆந் திகதிகொண்ட 943 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதினெட்டு தசம் மூன்று பர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18.3பே.) இது காலி காணிப்பதிவகத்தில் ஏ 574/ 265 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 22, டிக்சன் கீழ் வீதி,
காலி.

11-742

---

## றுஹுன அபிவிருத்தி வங்கி-கெகனதுர கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின்கீழ் றுஹுன அபிவிருத்தி வங்கி சட்டத்தின்கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய விசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்கவும், உருவாக்கப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின்படியும், 2007.05.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு பெயர்பெற்ற சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான சரோஜனி அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.07.20 ஆந் திகதிக்குரிய இலக்கம் 4124 எனும் ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல் "சிரி நிவஸ" தலல்ல வடக்கு கெகனதுர எனும் முகவரியில் வசிக்கும் ஜொனிக்குஹேவா பிரேமசிரியும், பல்லே கெதர முதியன்சேலாகே முதியன்சேலாகே தம்மிக பிரியன்தி பண்டார அவர்களினால் செலுத்தாதுவிடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின்கீழ் தொண்ணூறாயிரத்து முந்நூறு ரூபா (ரூ. 90,300) க்கான பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2006.06.22 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 20%ப்படி தொண்ணூறாயிரத்து முந்நூறு ரூபா (ரூ. 90,300) க்கான பணம் ஏலவிற்பனைத் திகதியிலிருந்து இன்னும் வட்டியுடன் ஏலவிற்பனைச் செலவும், இதர செலவுகளுக்கான ஏதாவதொரு பணம் கிடைத்திருப்பின் அவற்றைக் கழித்துக் கொண்டு அவற்றை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த அவர்களினால் இலக்கம் 4124 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களும், ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது.

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் விவரணம்

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் தலல்ல (வடக்கு), யில் அமைந்துள்ள கொடேருப்ப எனும் காணியின் ஒன்றிணைக்கப்பட்ட துண்டு இல. 07, 08, 09 என்ற துண்டு தொடர்பாக 1999.09.09 ஆந் திகதியின் கே. பி. எஸ். யாபா மானக இடத்தில் இலக்கம் 2804 என்ற வரைபடத்தின் பிரகாரம் பிரிக்கப்பட்ட 'சீ' எழுத்தைக் கொண்ட துண்டு- வடக்கே : இலக்கம் 2804 எனும் வரைபடத்தின் பிரகாரம் ஏ, பீ எழுத்தைக் கொண்ட துண்டு ; கிழக்கே : ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 15 இன் 12 அடியைக் கொண்ட அகலமுள்ள பாதையும் ; தெற்கே : இலக்கம் 2804 எனும் வரைபடத்தின் 'டீ' எழுத்தைக் கொண்ட ஆரம்ப துண்டும், இல. 10 என்ற துண்டும் ; மேற்கே : இல. 06 என்ற துண்டும் எல்லையாகக் கொண்ட இருபத்தொன்பது தசம் ஒன்று ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 29.15பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் மரங்கள், பழவர்க்கங்கள், பயிர்ச்செய்கை உட்பட கட்டிடங்களும் அடங்கலாக.

இக்காணிக்கு செல்ல இலக்கம் 15 என்ற பாதையும் அதை உபயோகிக்க உரிமையும் எனது அதிகாரத்தின்கீழ் கொடுக்கப் பட்டுள்ளது.

இக்காணி மாத்தறை காணிப்பதிவு அலுவலகத்திலே 2005.07.20 ஆந் திகதிய பீ/552/268 இல் பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். ஜே. ரத்நாயக்க,
தலைவர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

11-769

---

## வரையறுக்கப்பட்ட எம்சீபி வங்கி

### இலங்கை கிளையில் பகிரங்க ஏலம்மூலம் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விற்பனை - 2007, செத்தெம்பர் 21 ஆந் திகதிய சுற்றோட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள பணிப்பாளர்கள் சபையின் தீர்மானம்

"ஈடுவைத்தவரான இலங்கை, கொழும்பு 4. லொறீஸ் வீதி, 26/5 ஐச் சேர்ந்த திருமதி சயநாயகி ஜெகதீஸ்வரன் கன்னிப் பெயர் வடிவேல் மற்றும் கொழும்பு 12, மத்திய வீதி, டி 1/1 இல் அமைந்துள்ள திருவாளர்கள் சிற்றி ட்ரான்ஸ்போட் சேர்விசஸ் எனும் பெயர்வடிவிலான நிறுவனத்தின் கீழ் வியாபாரத்தை நடத்தும் உரிமையாளர் திரு. சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன் ஆகியோர் வரையறுக்கப்பட்ட எம்சீபி வங்கி (முன்னர் வரையறுக்கப்பட்ட முஸ்லிம் கொமர்ஷியல் வங்கி_ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு வீ. பாலசுப்பிரமணியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, திசெம்பர் 13 ஆந் திகதியிடப்பட் ஈட்டு முறி இல. 3512 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். இலங்கை, கொழும்பு 10, ஸ்ரீ சங்கர ராஜா மாவத்தை, 542ஏ இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட எம்சீபி வங்கி (முன்னர் வரையறுக்கப்பட்ட முஸ்லிம் கொமர்ஷியல் வங்கி) இற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி மூலம் 2007.8.31 ஆந் திகதியன்றுள்ளவாறு ஒரு கோடியே தொண்ணூற்றொரு இலட்சத்து அறுபத்திரண்டு ஆயிரத்து எண்ணூற்று எண்பது ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூபா 1, 91, 62, 880.82) கொண்ட தொகை, 2007 செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து இருபத்தைந்து சதவீத

(25%) வட்டியுடன் சேர்த்து வருமதியாகவும் உரியதாகவும் உள்ளது.

1995 ஆந் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வஙகியினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம், சொல்லப்பட்ட தொகை ஒரு கோடி தொண்ணூற்றொரு இலட்சத்து எண்பத்திரண்டு ஆயிரத்து எண்ணூற்று எண்பது ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூபா 1,91,62, 880.82) ஐ 2007, செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஆண்டிற்கும் இருபத்தைந்து சதவீத (25%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து மற்றும் அறவிடப்படவேண்டிய வேறேதேனும் பணஙகள் ஆகியவற்றையும் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட ஈட்டு முறி இல. 3512 இனால் வரையறுக்கப்பட்ட எம்சீபி வங்கி (முன்னர் வரையறுக்கப்பட்ட முஸ்லிம் கொமர்ஷியல் வங்கி) இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள், உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கின்றது."

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபையின் நிருவாக எல்லைகளுக்குள், வட்டார, இல. 39- மீலாகிரிய, பம்பலப்பிட்டி லொறீஸ், வீதிக்கப்பால், 3.05 (10 அடி) அகல வீதி வழியே அமைந்துள்ளதும் லொறீஸ் வீதி, வரிமதிப்பு இல. 26/5 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1996, ஏப்பிறல் 27 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5478 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்ண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 5 இன் எல்லைகளாவன- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 216 இல் துண்டு 6, 3.05 மீ (10அடி) அகல வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபடம் இல. 216 இல் துண்டு 4 லோரீஸ் வீதி, வரிமதிப்பு இல. 26/4 ஐக் கொண்டது : கிழக்கு : லொரீஸ் வீதி, வரிமதிப்பு இல. 30/1, ஐக் கொண்ட வளவுகள் ; தெற்கு : பம்பலப்பிட்டி வீதி, வரிமதிப்பு இல. 43/5ஏ ஐக் கொண்ட வளவுகள் ; மேற்கு : பம்பலப்பிட்டி வீதி, வரிமதிப்பு இலக்கங்கள் 37/1, மற்றும் 29/1 ஐக் கொண்ட வளவுகள் இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 5478 இற்கமைய எட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 8.75பே) விஸ்தீரணமுடையது ; கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் 768/265 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

மேற்கூறப்பட்ட பம்பலப்பிட்டி லொரீஸ் வீதி வழியே அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். அத்தேநாயக்க அவர்களால் 1955 மே 7ஆந் திகதியிடப்பட் வரைபடம் இல. 216 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 6 என அடையாளமிடப் பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் சொல்லப்பட்ட துண்டு 6 இன் எல்லைகளாவன- வடக்கு : லொரீஸ் வீதி, கிழக்கு : இதற்கு வளவுகளின் துண்டுகள் 1, 2, 3, 4 மற்றும் 5 ; தெற்கு : துண்டு 5, மேற்கு : லொரீஸ் வீதி, வரிமதிப்பு இல. 24 மற்றும் மெஜெஸ்ரிக் அவென்யு வரிமதிப்பு இல. 11 மற்றும் காலி வீதி, வரிமதிப்பு இல. 30 ஐக் கொண்ட வளவுகள் இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 216 இற்கமைய பதினொன்று தசம் மூன்று ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 11.37பே) விஸ்தீரணமுடையது ; கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் ஏ 768/260 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபை

வரையறுக்கப்பட்ட எம்சீபி வங்கி.

11-790

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.